விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 096 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 11 வெள்ளிக்கிழமை (25.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

eDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன் கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
(C-4055)
www.edus.lk | 0777 123 330

## அரசின் பெரும்பான்மையை இல்லாமல் செய்வோம்

### விமல், கம்மன்பில உட்பட அரசின் 11 பங்காளிகள் மகாநாயக்க தேரர்களிடம் தெரிவிப்பு



(கண்டி) அரசாங்கத்தின் பெரும்பான்மையை இல்லாமல் செய்வோம் என பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ச உள்ளிட்ட அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களிடம் நேற்று தெரிவித்துள்ளனர். 15

## சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

### தனக்குத்தானே தீ மூட்டமுயன்ற நபரால் பரபரப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக மதுபோதையில் தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீ மூட்ட முயன்ற நபரை சாவகச்சேரிப் 15

## எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் 16 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு அருகே நேற்று 15

## எரிபொருள் நிரப்பும் வாகன இலக்கங்கள்

### இராணுவத்தால் பதிவு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் எரிபொருள் விநியோகங்களை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்காணித்து வருகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவிவரும் 15

## ஜனாதிபதி - கூட்டமைப்பு இன்று சந்திப்பு

### அதிகார பகிர்வு தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்

(கொழும்பு)

நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு குறித்தே அதிக அவதானம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## 30 முதல் 40 சதவீதத்தால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும்

(02 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயத்திற்கு வழிபட வந்தவர்

### மயங்கி விழுந்து உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சிவன் அம்மன் ஆலயத்திற்கு வழிபட வந்த ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்ப 15

### ராஜபக்ச அரசை விரைவில் வீழ்த்துவோம்

## கேவலமான அமெரிக்கரை நிதியமைச்சராக வைத்துக்கொண்டு நாடு முன்னேற முடியாது

### மகாநாயக்கர்களை சந்தித்தபின் விமல் சூளுரை



(கண்டி)

கேவலமான அமெரிக்கரை நிதியமைச்சராக வைத்துக்கொண்டு இந்த நாடு இனி முன்னேற முடியாது. அரசின் 11 பங்காளிக் கட்சிகள் ஒன்றிணைந்து இந்த அரசாங்கத்தின் 113 பெரும்பான்மயை விரைவில் அழித்து இந்த மேலாதிக்க ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். நகர் பகுதியில்

## இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மத்தியபகுதியின் உணவுக்கள ஞ்சியப் பகுதியில் 38 வயது உடைய இளை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் ரெஜிபோம் டிசைனிங் நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (கொக்குவிலுக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.) (இ)

**075 039 4357, 077 039 4359**

## வேலை வாய்ப்பு

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள **TILKO HOTEL** இல் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- Cashier
- General Technician
- Kitchen Helper
- House Keeping Staff
- Receptionist
- Laundry Assistant

(10765)

**- 077 905 3923**

**Email : Sujithan.tilko@gmail.com**

## கடை வாடகைக்கு தேவை

பலசரக்கு கடைக்கு பின்வரும் இடங்களில் கடை வாடகைக்கு தேவை.

- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- பருத்தித்துறை
- வவுனியா

(10767)

**076 287 8655**

## விண்ணப்பம் கோரல்

பாடசாலை ஒன்றில் இலிகிதராக வேலை செய்வதற்கு கீழ்க் காணும் தகுதி உள்ளவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

- கணக்கு செய்யத் தெரிந்தவர்கள்
- நிர்வாகத் திறனுள்ளவர்கள்
- பிள்ளைகளுடன் அன்பாய் பழகக் கூடியவர்கள்
- ஆங்கிலம் பேசக் கூடியவர்கள்
- ஆங்கில மொழிமூல கற்பித்தல் (முன்பள்ளிப் பாடசாலைகளில் வேலை செய்த அனுபவமும் வரவேற்கத்தக்கது.)

ஏனையவை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

The Director,
154, Brown Road,
Jaffna.

E mail :- sat37aero@gmail.com
Tel.no. 077 244 4172/ 021 222 6242

(C-4040)


## த.தே.கூ உறுப்பினர்களிடம் பொலிஸார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்) பதாதைகளை சேதப்படுத்தியதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உப தவிசாளரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் மட்டுவில் பகுதியில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட நிகழ்வின் பதாதைகளை சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களை அழைத்து வந்ததாகக் கூறி இருவரிடம் சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம)

## அத்தியாவசிய...

ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியப் பொருட்களின் விலை 30 முதல் 40 சத வீதத்தால் அதிகரித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சீனி, பருப்பு, அரிசி ஆகியனவற்றின் விலைகள் இவ்வாறு அதிகரித்துள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (ம)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1993 இல் பிறந்த அத்தம் நட்சத்திரம், செவ்வாய் 7, கி.பா 17 உடைய அரச தொழில் புரியும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

(10763)

**077 944 1075**

## சிறுநீரகம் தேவை

O, B இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை

தொடர்பு (10771)

**076 239 9874**

## கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) மூளாய்

### வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

இடம் : வைத்தியசாலை மண்டபம்
காலம் : 27.03.2022 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணி
தலைவர் : திரு. மா. ஞானேஸ்வரன் (தலைவர், கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்)

ஏற்கனவே எம்மால் தனித்தனியாக அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கூட்ட அறிவித்தலின் பிரகாரம் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தேர்வும் நடைபெறுமென்பதை உறுதிப்படுத்துகிறேன்.

க.செல்வராசா,ஜே.பி.
செயலாளர்

மா.ஞானேஸ்வரன்
தலைவர்

(C-4653)

தொடர்புகளுக்கு:

**Email : moolaii@yahoo.com** **021 225 0441**


## விழிநீர் ஓயமுன்னே வந்ததுவோ ஓராண்டு...



நல்லாசான்

அமரர் திருமதி **பிரபாலினி வரதராஜன்** அவர்கள்

(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

கடமையில் கண்ணியம்
பணிகளில் நேர்த்தி
நடையில் ஒரு மிடுக்கு
பேச்சில் ஒரு தெளிவு
நேர்மையுடன் கருத்தாடல்
அத்தனைக்கும் சொந்தக்காரி

ஆளுமைப் பெண்களில்
நீயும் ஒருத்தி...
கரையிலாக் கல்வியை
கனதியுடன் வழங்கினீர்
காலங்கள் கடந்தாலும்
மாறாது உந்தன் நினைவலைகள்

*நீங்கா நினைவுகளுடன்..*

**இணைந்து பணியாற்றிய அதிபர், ஆசிரியர்கள்**
**யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை**

(10766)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

## Antyeshti Ritual Invitation



கடந்த 25.02.2022 அன்று இறைபதமடைந்த

### அமரர் கந்தப்பு இளங்கோ

***(Late Kanthappu Elanko FCA , FCMA, MBA, CIMA)***

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள், பங்குனி மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை (2022.03.27) எமது இல்லத்தில் காலை 5.00 மணிக்கு இடம்பெற வுள்ளது. தொடர்ந்து மதியம் எமது இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ் விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக் கின்றோம்.

We cordially invite you to join Elanko's antyeshti ritual on March 27th at our home that starts at 5.00 a.m followed by lunch at home.

**'நவகுடில்', துன்னாலை மேற்கு, கரவெட்டி.**
*'Navakudil' Thunnalai West, Karaveddy.*
021 226 2587

(C-4054)

இப்படிக்கு
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலம் தேடி வரும் எம் உறவுகளை

# சிறைகளில் அடைப்பது கொடுமையிலும் கொடுமை

## — செந்தமிழன் சீமான் கண்டனம் —

**(சென்னை)**

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் காரணமாக தாய்த் தமிழகத்தில் தஞ்சம் கேட்டு, கடல் வழியாக , படகுகளின் மூலம் அடைக்கலம் தேடிவரும் ஈழச் சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது கொடுமை என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் வெளியிட்டார்.**

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் விளைவினால் அத்தியாவசியப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து, அந்நாட்டுக் குடிமக்கள் அன்றாடச் செலவினங்களைக்கூட எதிர்கொள்ள முடியாது, வறுமைக்கும், ஏழ்மைக்கும் உள்ளாகி, தவித்து வருகின்ற செய்திகள் கவலை அளிக்கின்றன.

சிங்கள இன வெறிப் பிடித்து, தமிழர்களை அழித்தொழிக்க, உலகெங்கும் கடன்களை வாங்கிக் குவித்து, நாட்டு மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிலும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்தாத கொடுங்கோல் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறி செயற்பாடுகளே இத்தகைய நிலைக்கு காரணம் என்றாலும், இன்றைக்கு தமிழர்களும் சேர்ந்து பாதிப்புக்குள்ளாகி நிற்பது பெரும் மன வேதனையைத் தருகிறது.

இவ்வளவு ஆண்டுகளாக, சிங்கள ஆட்சியாளர்களின் இன ஒதுக்கல் நடவடிக்கைகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு, கொடும் துயரத்திற்கு ஆளாகி நின்ற தமிழ் சொந்தங்கள், இப்போது பொருளாதார நெருக்கடியினாலும், வறுமையின் கோரப்பிடியினாலும் வாடி வதங்கி, வாழ்க்கையை நடத்த முடியாத துயர்மிகு சூழலில், நாளும் அல்லல்பட்டு வருவது பெரும் மனவலியைத் தருகிறது.

இத்தகைய கையறு நிலையில், தாய்த் தமிழகத்தில் தஞ்சம் கேட்டு, கடல் வழியாக, படகுகளின் மூலம் அடைக்கலம் தேடி வரும் ஈழச்சொந்தங்களை வழக்குகள் போட்டு கைது செய்வது மேலும் துன்பத்திற்குள்ளாக்குவது கொடுமை. அதிலும் பெற்றோர்களையும் குழந்தைகளையும் பிரித்து சிறையிலும்முகாம்களிலும்அடைப்பது கடும் கண்டனத்திற்குரியது.



அனைத்தையும் இழந்து வரும் நம்மக்களை ஆரத் தழுவி அரவணைத்து, திபெத்திய ஏதிலிகளுக்கு இந்நாடு வழங்கியிருக்கிற சலுகைகளையும், வசதிகளையும் போல, நம் சொந்தங்களுக் கும் செய்து கொடுத்து, அவர் களைக் காக்க முன் வர வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# ஜனாதிபதியுடனான சந்திப்பில் அரசியல் தீர்வே குறிக்கோள்

## பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

(கொழும்பு)

ஜனாதிபதியுடன் இன்று இடம்பெறவுள்ள கூட்ட த்தின் போது, அரசியல் தீர்வு குறித்தே அவதானம் செலுத்தப்படும் என தமிழத் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ நிராகரித்துள்ள நிலையில் குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே எம்.ஏ சுமந்திரன் அதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்ட ஜனாதிபதி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு குறித்தே அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

அவ்வாறு, தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கான இணக்கம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளனர்.

இந்த விடயத்தில் புலம் பெயர் தமிழர்களுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான இணைப்பு பாலமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு திகழும்.

எவ்வாறாயினும், அதிகாரப்பகிர்வு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வுக்கான பணிகளை அரசாங்கம் முன்னெடுத்தால் மாத்திரமே இது சாத்தியமாகும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார். (நி-5)

# எரிவாயு நெருக்கடி முடிவுக்கு வர ஒரு வாரமாகும்- லிட்ரோ நிறுவனம்

(கொழும்பு)

அடுத்த 10 நாட்களுக்குள் ஒரு மில்லியன் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.மேலும் 3,600 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜய சிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்த கப்பலிலிருந்து எரிவாயுவை இறக்கும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளதாகவும் குறித்த எரிவாயு தொகையை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிவாயுவிற்கான நெருக்கடி நிலையை முடிவுக்கு கொண்டு வர இன்னும் ஒரு வாரம் செல்லும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் 08.04.2022 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கோண்டாவில் மாணவர் விடுதி உணவகம் | கோண்டாவில், யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000268 இற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் 97000060000276 இற்கும் தனித் தனியாக மக்கள் வங்கியில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைகழக நலச்சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 021 222 6716) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**24.03.2022**

(சி-4050)



# 3ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21.04.1939 | 28.03.2019 |

அமரர்

**பத்மநாதன் அன்னலட்சுமி**



தாய் என்னும் தீபம் அணைந்து
ஆண்டுகள் மூன்றாகிவிட்ட போதும்
பாசம் என்னும் ஒளியால் எம்மை வாழ
வழிகாட்டி கொண்டிருக்கும்
எங்கள் அம்மாவே அம்மம்மாவே
திரும்பி வர முடியாத தூரத்திற்கு
நீங்கள் போய் விட்ட போதும்...
என்றும் எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்
நீங்கள் காட்டிய வழியே நாம் வாழ்வோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நல்லூர் முருகனை வேண்டுகிறோம்.

(10754)

**கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
18
–
05
–
1968



இறப்பு
24
–
03
–
2022

## சீமான்பிள்ளை எமலின் தர்மறட்ணம்

மானிப்பாய் 1 ஆம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் புலோலி வடக்கு ஊரியவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சீமான்பிள்ளை எமலின் தர்மறட்ணம் அவர்கள் நேற்று (24.03.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீமான்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் இரண்டாவது மகனும் காலஞ்சென்ற பிலிப்பு - பூமணி தம்பதியரின் மருமகனும் றொசிந்தா அவர்களின் அன்பு கணவரும் கமிஸ்ரனின் பாசமிகு தந்தையும் ஜீவன், றதி, றொபேட், ராதா, பாலன், டோறா மற்றும் ஜெபா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜீவா (கனடா), ராதா, ஜெயா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.03.2022) வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

076 267 9174
077 630 7767

(C-4056)

## கப்டன் பதவியில் இருந்து டோனி விலகல்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் பதவியில் இருந்து டோனி விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

2022 ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாளை தொடங்கவுள்ளது. முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதுகின்றன.

இந்நிலையில் ரசிகர் களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியாக டோனி சென்னை அணி கப்டன் பதவியில் இருந்து விலகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் கப்டன் பதவியை ரவீந்திர ஜடேஜாவிடம் ஒப்படைத்து விட்டதாக தெரிய வந்துள்ளது. அதேசமயம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வீரராக டோனி தொடர்வார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. (4-6)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய நண்பன் சி.கஜேந்திரன் (தலைமைக் கணக்காளர்- மாவட்ட செயலகம், கிளிநொச்சி) அவர்களின் அன்புச் சகோதரன்

## திரு. சிவஞானம் பிரபாகரன்

B.Sc (Hons), PGDE, M.A (Tamil), Ph.D (Schol.)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வலம்புரி நண்பர்கள்

# மரண அறிவித்தல்

## திரவியம் இரத்தினம்

தோற்றம்
1943.10.07

மறைவு
2022.03.23



யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் இரத்தினம் நேற்று முன்தினம் (23.03.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிமாம்பிள்ளை திரவியம் - வன்னியர் றோசமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் பூமணி, ஸ்ரீபன், லூத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் லில்லி அக்ன்ஸ் (தாத்தி) அவர்களின் பாசமிகு கணவரும் றெஜிலமன், ஜஷ்மின், ஏபன், லெபனன், பெகின், ஜறின், ஜெனின், எடின் ஆகியோரின் அன்புத் தந்தையும் நீலாம்பரி, ரேக்கா, அனு, கவிதா, ஜெறோம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அப்ஷரா, அருணி, நிகில், லியன், அமோரா, ஜோஷ், அதிதி, ஆதிரா, அதீக்ஷா, ஆரோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.03.2022) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்பு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர் 077 006 2993

(10772)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்ச் சில்லுக்குள் அகப்பட்டு சிறுவன் படுகாயம்

(சாவகச்சேரி)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளாலி-எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வியாழக்கிழமை மதியம் காரின் கீழ் மறைந்திருந்து விளையாடிய ஒன்றரை வயதுச்சிறுவன் கார்ச் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்தார். வீட்டிற்கு விருந்தினர்களை ஏற்றி வந்த காரின் கீழ் சிறுவன் மறைந்திருப்பதனை அறியாத அக்காரின் சாரதி காரை நகர்த்திய போது சிறுவன் சில்லுக்குள் அகப்பட்டு படுகாயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த சிறுவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-5-30)

# மின்வெட்டு நேரத்தில் திருடர்கள் கைவரிசை

(குப்பிழான்)

மின்வெட்டு அமுலிலிருந்த வேளை அச்சுவேலி மத்திய கல்லூரியின் அலுவலகம் உடைக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மடிக் கணனி ஒன்று திருடப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் மின்வெட்டு நடைமுறையிலிருந்த வேளை பாடசாலைச் சூழலில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமரா செயற்படாது இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்தினரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-5-18-33)


**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**WALK-IN-INTERVIEW**
**Establishment of Library of Tamilology**

A walk in interview for the post of **PROJECT ASSISTANT** on contract basis will be held on 30.03.2022 (Wednesday) at 9.30 am at the Board Room of the University.

**Qualifications:**

I. Should have passed the G.C.E. O/L Examination in 06 subjects with three credit passes including in Sinhala/ Tamil, English Language / English Literature and Mathematics.
**And**

II. Should have passed the G.C. E. A/L Examination with three credit passes.

**Note:** Work experience in similar projects and knowledge related to Library and Information Science would be considered as an additional qualification.

**Age:** Applications should be less than 40 years of age

**Salary**: Gross Salary of LKR 30,000.00 PM. In addition EPF 12% and ETF 3% will be paidCandidates are required to appear with relevant certificates, NIC and **self-prepared applications**

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**24.03.2022**

(C-4051)



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

**கடந்த 23.02.2022 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி**



அமரர். திருமதி
**சின்னமணி கதிரவேலு**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 25.03.2022 இன்று வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(10691)

புளியங்கண்டு ஒழுங்கை,
ஆனைக்கோட்டை

குடும்பத்தினர்
077 277 6240


# இராசிபலன்

25.03.2022
பங்குனி 11, வெள்ளிக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.15 மணிவரை

மூலம் பிற்பகல் 5.45 மணிவரை
சுபநேரம்- 6.15-7.45 மணிவரை
இராகுகாலம் -10.45-12.15 மணிவரை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகினி

**வளவன்**




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாடு மகத்துவம் தரும்.




சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பல நாட்களாகஇருந்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், உடல் நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளால் பெருமையுண்டு.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வாக்கு மேன்மையுண்டு.




செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும்.




ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.




வழிபாட்டில் நம்பிக்கை கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.




சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.





செய் தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

சுருங்கச் சொல்லே அறிவின் ஆன்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சித்தர் யோகர் சுவாமிகளின் மகாசமாதி தினம் இன்று



ஈழமணித் திருநாட்டுக்கெனத்தனித்தசித்தர் பாரம்பரியம் உண்டு.

அந்த வகையில் ,

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் வாழ்ந்த அம்பலவாணர் சின்னாச்சியம்மை என்னும் தம்பதியினருக்கு 1872-05-29 அன்று ஒரு ஆண் மகவுபிறந்தது. அதற்கு சதாசிவம் எனப் பெயரிட்டனர். கொழும்புத்துறையில் வாழும் சூழலில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கல்விகற்றுப்பின் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் களஞ்சியக் காப்பாளராகப் பணி புரிந்தார். செல்லப்பாசுவாமியுடன் 1905 இல் ஏற்பட்ட தொடர்பு அவரை ஆன்மீகப் பாதைக்கு இட்டுவந்தது.

செல்லப்பாசுவாமி எழுப்பிய 'யாரடா நீ'எனும் கேள்வி அவரை சுய விசாரணைக்கு உட்படுத்தியது. குருநாதர் கூறிய'எப்பவோமுடிந்த காரியம், ஒரு பொல்லாப்பும் இல்லை, நாம்' அறியோம், முழுதும் உண்மை'முதலியம காவாக்கியங்கள் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கின. உவமையிலாக் கலைஞானத்தை, உணர்வரிய மெய்ஞானத்தை ஊட்டி,சதாசிவனைஞாலம் போற்றும் யோகர் சுவாமி ஆக்கின. அவர் 1964.03.24 அன்று தேகவியோகமடைந்தார்.

தான் வாழும் பிரதேசம், நாடு என்பவற்றுக்கு அப்பால் உலகம் முழுவதும் சீடர்களை கொண்ட ஈழத்துச் சித்தராகயோகர் சுவாமியே அடையாளப்படுத்தப்படுகிறார். அவரது அருளுரைகளாலும் பாடல்களாலும் அற்புதங்களாலும் கவரப்பட்டோர் அநேகர்.

யோகர் சுவாமியின் நேரடிச்சீடர்களாக மார்க்கண்டு சுவாமி,சந்தசுவாமி, செல்லத்துரை சுவாமி முதலானவர்கள் சொல்லப்படுகின்றனர்.

அவரது போதனைகள் 'நற்சிந்தனை'எனும் நூலாக்கப்பட்டது. நல்லகுருநாதரின் மகாவாக்கியங்களை விளக்குவனவாக அச்சிந்தனைகள் அமைந்தன. வேதாந்த, சித்தாந்த பொதுமைத்தளத்தின் வழி உலகத்துவாழ் மக்களுக்கு வழிகாட்டும் தத்துவ உரையாடல்களை,ஆன்மீக வாழ்வை அவை எடுத்துரைக்கின்றன. வாழ்தலின் அர்த்தத்தைப் பேசுகின்றன. கடவுள் ,ஆன்மா,பிரபஞ்சம், பிரபஞ்ச இல்வாழ்வின் சிறப்பு, குருநாதன் அருள்,நல்லூரான் சிறப்பு,ஆன்ம சுயவிசாரணை எனப்பலதளங்களில் அவை விரிகின்றன.

மக்களுக்குவழிகாட்டுதற் பொருட்டு சிவதொண்டன் நிலையமும் சிவதொண்டன் பத்திரிகையும் இவரால் தொடங்கப்பட்டன. இவை இன்றும் மக்களை ஆன்மீகத் தளத்துக்கு வழிப்படுத்துகின்றன. சிவதொண்டன் பத்திரிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் எழுதுபவரின் பெயர் தாங்கிவருவதில்லை என்பது சுட்டத்தக்கது .கிழக்கிலங்கையிலும் சிவதொண்டன் நிலையம் தன் பணிபுரிந் துவருகின் றது. ஹாவாய் ஆதீனம் உலகெல்லாம் யோகர்சுவாமியின் பெயரால் சிவத்தியானத்தையும் ஆன்மீகவாழ்வையும் பரப்பிவருகின்றது.

யோகர்சுவாமியிடம் மதபேதம்,மொழிபேதம், இனபேதம்,சாதிபேத மென எப்பேதமும் இருந்ததில்லை. அதனாலேயே யாவராலும் அவரை அணுகமுடிந்தது. அவரது ஞானக்கதிர்கள் உடலுள் புதைந்திருந்த ஆன்மாக்களைத் தட்டியெழுப்பின. சுயஆத்ம விசாரணையை உருவாக்கின.

உள்ளத்தில் உண்மையொளியை உண்டாக்கின. யோகர் சுவாமி தேசாந்திரியாகத் திரிந்து ஆன்மபக்குவர்களைக் இனங்கண்டுஅருள் புரிந்துவழிப்படுத்தினார். இன்று உலகதேசமெல்லாம் அவரைத் திசைமானியாகக் கொண்டு ஆன்மபக்குவர்கள் ஆன்மீகமணம் பரப்புகின்றனர்.

தி. செல்வமனோகரன்
விரிவுரையாளர்,
சைவசித்தாந்தத்துறை,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## சிலிண்டர் முகவர்களுக்கு விசேட அறிவித்தல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர்களின் விநியோகம் தொடர்பாக பாவனையாளர் அதிகார சபையினால் விசேட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் மாவட்ட இணைப்பதிகாரியின் தலைமையில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டு லிட்ரோ மற்றும் லாப்ஸ் எரிவாயு சிலிண்டர் முகவர்களினை சந்தித்து சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர்.

அதன்படி, எரிவாயு விநியோகத்தில் விநியோகத்தின் விபரங்களை அதிகாரசபையினால் வழங்கப்பட்ட படிவத்தினை நிரப்புவதன் மூலம் பெறவேண்டும், பிரதேச ரீதியாக தங்களிடம் இருப்பிலுள்ள எரிவாயுக்களை பிரித்து முகவர்களே பங்கீட்டு அட்டை முறையில் வழங்குதல் வேண்டும்,இயன்றவரை வியாபார நிலையங்களுக்கு இருப்பிலுள்ள மூன்றில் ஒரு பகுதியையேனும் வழங்க முன்வர வேண்டும்,பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவகையில் விநியோக இடத்தில் விநியோகிக்க வேண்டும்,எரிவாயு விநியோகம் தொடர்பான அறிவுறுத்தல் பலகை காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் பரிசோதிக்கப்பட்டதுடன், முறைகேடான வியாபார நிலையங்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் எரிபொருள் நிலையங்கள் பரிசோதனை செய்யப்பட்டு இருப்புக்கள் கணக்கெடுக்கப்பட்டன. (4-5-18-33)

## மின் வெட்டு இருளில் மருத்துவமனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் ஜெனரேட்டர் (மின்னாக்கி) பழுதடைந்தமையால் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு மருத்துவ மனைவளாகம் ஒன்றரை மணி நேரம் இருளில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 8மணி தொடக்கம் 9.30மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருந்த ஒன்றரை மணிநேரம் இவ்வாறு மருத்துவமனை இருளில் மூழ்கியது.

இதனால் நோயாளர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(4-5-30)



"அனைவருக்கும் இனிமையான பயணம்" எனும் தொனிப்பொருளில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் தேசிய பெண்கள் குழு, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துடன் இணைந்து நேற்று பொதுப்போக்குவரத்து பேருந்துகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்காக விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொண்டது.இதன்போது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கான சுலோகங்கள் அடங்கிய ஸ்டிக்கர் வாகனங்களில் ஒட்டப்பட்டதுடன் துண்டுப்பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்-சிவசாந்தன்,ரவிசாந்)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் லிற்றின் மாஸ்ரேஸ் மொண்டிசூரி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைக்கு அருகில் உள்ள லிற்றின் மாஸ்ரேஸ் மொண்டிசூரி மைதானத்தில் சமாதான நீதவான் கி. சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-5)



கோண்டாவில் ஸ்ரீ வாகீஸ்வரி முன்பள்ளியின் கண்காட்சி நிகழ்வு, சந்தை நிகழ்வு, பேச்சுத் திறன்கள் நிகழ்வு மற்றும் தரம் ஒன்றிற்கு செல்லும் மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு என்பன அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம் பெற்றது.

## ஆனந்த அனுபவ பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஜியின் ஆனந்த அனுபவ பயிற்சி இன்று 25 ஆம் திகதி முதல் நாளை மறுதினம் 27 வரை மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை நல்லூர் மகேசன் வரன் மண்டபத்தில் இடம் பெறும். (4-5)

## 22 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 22 இந்திய மீனவர்களும் நேற்று முன்தினம் புதன் கிழமை மீளவும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு நிபந்தனையின் அடிப்படையில் இந்திய மீனவர்கள் 22 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மிரிஹான இடைத்தங்கல் முகாமிற்கு அனுப்பி இந்தியாவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (4-5-18-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் அதிகரிக்கும் பொருட்களின் விலை

## தாமதக் கட்டணமே அதற்கு காரணம்

(கொழும்பு)

**சுமார் 1,500 கொள்கலன்கள் பணம் செலுத்தி விடுவிக்க முடியாமல் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

குறித்த பொருட்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதத்திற்காக கப்பல்களுக்கு மேலதிக கட்டணத்தை செலுத்த வேண்டியுள்ளதால் பொருட்களின் விலை கிலோவுக்கு 10 முதல் 35 ரூபாய் வரை அதிகரிக்கும் என தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

துறைமுகத்தில் சிக்கியுள்ள கொள்கலன்களில் கோதுமை மா, அரிசி, சீனி, கடலை மற்றும் மிளகாய் உள்ளிட்டவை அதிக ளவில் க்ாணப்படுவதாகவும் எதிர்வரும் புத்தாண்டு காலப் பகுதிக்கு முன்னர் அவற்றை விடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)


# 50 வருடங்களின் பின் பாவனைக்கு வந்த கரி இஸ்திரிப் பெட்டி

(கொழும்பு)

நாட்டில் 50 வருடங்களின் பின் கரி இஸ்திரிப் பெட்டிகள் மீண்டும் பாவனைக்கு வந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக கரி இஸ்திரிப் பெட்டிகள் மீண்டும் சந்தை ஊடாக வந்துள்ளன.

தற்போது கரி இஸ்திரிப் பெட்டிகளுக்கு நுகர்வோரிடம் அதிக கோரிக்கை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.



கரி சூடாக்கி ஆடைகளை தேய்க்கும் இஸ்திரிப் பெட்டிகள் 2000 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# கண்டியில் தீ விபத்து

## தந்தை, மகள் உள்ளிட்ட மூவர் பலி

(கண்டி)

கண்டி - கட்டுகஸ்தோட்டை, மெனிக்கும்புரவத்தை பகுதியில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி தந்தை, மகள் உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகவும் தீ விபத்தில் சிக்கி ஒருவர் காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தீப் பரவல் காரணமாக 4 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகள் மற்றும் மேலும் ஒரு இளைஞன் ஆகியோர் உயிரிழந்ததுடன், தாய் காயமடைந்த நிலையில் கண்டி போதனா மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பதுடன், அது தொடர் பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. (நி-5)

# விடுதலைப் புலிகளின் தலைவரிடம் நாட்டைக் கொடுத்திருக்கலாம்

## சிங்களப் பெண்களின் விருப்பத்தை அம்பலப்படுத்தினார் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் காலத்தில் அவரிடம் நாட்டைக் கொடுத்திருக்கலாம் என இன்று சிங்களப் பெண்கள் கேட்கின்றார்கள் என பராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிங்கள மக்கள் துன்பப்படுவதனை, வேதனைப்படுவதனை, தெருக்களில் இறப்பதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்களுக்காக நாம் அனுதாபப்படுகின்றோம். இதே விடயங்கள் எங்களது பகுதிகளில் நடக்கும் காலத்தில் விமானக் குண்டுகளுக்கும், பொஸ்பரஸ் குண்டுகளுக்கும், எறிகணைகளுக்கும், கொத்தணிக் குண்டுகளுக்கும் தமிழர்கள் கொல்லப்பட்ட போதெல்லாம் அதனை ஒரு நாட்டின் விடுதலையாக, தேசத்தின் விடுதலையாக இனப்படுகொலையை மறைத்து செய்த



இலங்கை அரசு இன்று அதனது விளைவுகளை அனுபவிக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# யாழ்ப்பாணம் உட்பட நாட்டில் அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிக ரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் மாத்திரம் 733 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 12,034 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதி களவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதே வேளை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 47 சுகாதார வலயங்கள் டெங்கு அபாய வலயங்களாக இனங் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# டொலர் பிரச்சினை தீரும் வரை வாகன இறக்குமதிக்கு அனுமதியில்லை

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

டொலர் பிரச்சினை தீரும் வரையில் வாகன இறக்குமதிக்கு அனுமதியில்லை என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியமற்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு டொலர் பிரச்சினை தீரும்வரையில்அனுமதி வழங்கப்பட முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதி தொடர்பில் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் தற்போதைக்கு அத்தியாவசிய பொருள் இறக்குமதிக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-5)


J/ Vadaliyadaippu Saivapiragasa Vidiyasalai

PRINCIPAL OFFICE OPENING CEREMONY

Date : 26.03.2022 (saturday)
Time : 09.30 A.M
Venue: School Main Hall

PRESIDENT
Mr.P.Pirathapan
Principal

CHIEF GUEST
Mr.K.Kaliyugan
(Principal - J/st. James Maha Vidiyalayam)

SPECIAL GUEST
Mr.K.Baskaran
(President IBC Tamil)

GUEST OF HONOUR
Mr.K.Ravindran
(Old Student)

*All are cordiallty invited*

School Society

Sponsored By :
Kabilan Foundation

(10748)



**பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**வெல்ல உற்பத்தி துறைசார் அனுபவம் மிக்க உற்பத்தி முகாமையாளர் தேவை**

எமது சங்கத்தின் உற்பத்தி தொழிற்சாலையில், வெல்ல உற்பத்தியினை மேற்கொள்வதற்கு உற்பத்தி துறைசார் அனுபவம் மிக்க முகாமையாளர் தேவையாகவுள்ளது.

**கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற/விலகிய பணியாளர்கள், துறைசார் அனுபவமும் ஆர்வமும் உடையவர்கள்** விண்ணப்பிக்க முடியும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 07.04.2022**

விண்ணப்பங்களை தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கண்டி வீதி-பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**க.இராசதுரை,**
**தலைவர்,**
**[illegible] சங்கம்,**
**கண்டி வீதி-பளை.**


(C-4049)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 03

# ஒரு தாயின் அன்பு மடல்



தலைக்கு மேல்
நான் தூக்கிக் கொஞ்சிய என் தங்க மகன்
என் தலைக்கு மேல் வளர்ந்து நிற்கிறான்
ஒரு பயம் எனக்கு எப்போதாவது ஒருநாள்
என் விசயத்தில் தலையிடாதே
என்று சொல்லிவிடுவானோ என்று
மகனே மறந்தும் அப்படிச் சொல்லிவிடாதே
மரணித்துப் போய்விடுவேன்
சின்ன வயதில் நீ அடிக்கடி கேள்வி கேட்பாய்
நான் சலிக்காமல் பதில் சொல்வேன்
என் வயதான காலத்தில்
நானும் உன்னிடம் குழந்தை போல்
வினா எழுப்பக்கூடும்
கத்தாதே வாயை மூடு என்று சொல்லிவிடாதே
வலி தாங்க முடியாத பாவி நான்
வீடெல்லாம் நீ இறைத்து வைத்த
சோற்றுப் பருக்கையை
என் விரல்களால் கூட்டி அள்ளுவேன்
என் முதிர் வயதில்
என் வாய்க்கொண்டு செல்லும்
உணவுத் தட்டு தரையில் விழக்கூடும்
தவறியும் என்னை திட்டாதே
தாங்க முடியாது என்னால்
என் சிறுநீர்ப்பை பலம் இழந்திருக்கக்கூடும்
சில இடங்களில் சிறுநீர் சிந்தியிருக்கக் கூடும்
இச்......சீ என்று முகம் சுழிக்காதே
என் முந்தானையில்
உன் சிறுநீர் வாசம்
இன்னும் மறையவேயில்லை
மயானம் நடந்து போக
திராணி இருக்கும்போதே
நான் இறந்துவிட வேண்டும்
மறந்தும் முதியோர் இல்லத்தில்
என்னை மூழ்கடித்துவிடாதே
ஒரு வருடம் உனக்கு
ரத்ததானம் செய்தவள் நான்
என் ரத்தத்தை
பாலாக்கி பருகச் செய்தவள் நான்
பரதேசியாய் என்னை பரிதவிக்க விட்டுவிடாதே
நான் இறப்பதற்குள் ஒரு முறையாவது
உன் மடியில் என்னை உறங்க வை
என் உயிர் பிரியும் நேரம்
நீ என் பக்கத்தில் இரு
கரம் கூப்பி கேட்கிறேன்
இதை நான் எழுதுவது ஏன் தெரியுமா ?
இதை படித்து என் எண்ணம் அறிவாய்
என்னை அறிவாய் என்னை நேசிப்பாய்
என்ற நம்பிக்கையில் அல்ல
ஒவ்வொரு தாயின் உணர்வும் இதுதான்
என்பதை நீ உணர வேண்டும்
பெண்மையை நீ மதிக்க வேண்டும்
இதை படித்து நீ அழுவாய் என்று எனக்குத் தெரியும்
அழாதே! பெண்மையை மதி அதுபோதும் நன்றி மகனே!

# ஒரு மாதத்

# தணியாத உக்

## ★ உருக்குலைந்த உக்ரைன்
## ★ 900 அப்பாவிகளை கொன்றெ
## ★ நாட்டை விட்டு வெளியேறிய ஒரு
## ★ உணவின்றி வாடும் 1 லட்

**(மொஸ்கோ)**

**உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து**
**மாதமாகிறது. இருப்பினும் ரஷ்யாவின் இ**
**எட்டப்படவில்லை என்று ரஷ்ய ஜனாதிபதி மாளின**

# காதலியை கரம் பிடித்தார் ஜூலியன் அசாஞ்சே



(லண்டன்)

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தனது நீண்டகால காதலியான ஸ்டெல்லா மோரிஸை தென்கிழக்கு லண்டனில் உள்ள உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் திருமணம் செய்துகொண்டார்.

ஜூலியன் அசாஞ்சே தனது விக்கிலீக்ஸ் நிறுவனத்தின் மூலம் அரசாங்க ரகசியங்கள[illegible] செய்தது தொடர்பான வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் உள்ளார்.

50 வயதான ஜூலியன் அசாஞ்சே 2019 முதல் பெல் மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தன்னை விட 13 வயது இளைய பெண்ணை ஜூலியன் அசாஞ்சே திருமணம் செய்து கொண்டுள்ளதுடன் இவர்களது திருமணம் பெல் மார்ஷ் சிறைச்சாலையில் கைதிகளை பார்வையாளர்கள் பார்வையிடும் நேரத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# ...த்தை கடந்தும் ...க்ரைன்-ரஷ்ய போர்

## ... நகரங்கள் ...ழித்த போர் ...கோடி மக்கள் ...ட்சம் மக்கள்

... இன்றோடு ஒரு ... இலக்கு இன்னும் ...கை தெரிவித்தது.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்யா அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. வான் வழியாகவும், கடல் மார்க்கமாகவும் உக்ரைன் மீது ரஷ்யா நடத்தத் தொடங்கிய தாக்குதல்கள் அடுத்தடுத்த நாட்களில் உக்கிரமானது.

இந்தத் தாக்குதல் காரணமாக உக்ரைன் மக்களும், அங்கு தங்கியிருந்த மற்ற நாடுகளை சேர்ந்தவர்களும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வெளியேறினார்கள்.

இப்படி போர்க் களத்துக்கு நடுவே உக்ரைன் நாட்டினரும் வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் ஆபத்தான முறையில் வெளியேறிய வீடியோக்களும், புகைப்பட காட்சிகளும் நெஞ்சை உருக்கும் வகையிலேயே அமைந்திருந்தன.

உக்ரைனில் நடைபெற்று வரும் ரஷ்ய படைகளின் தாக்குதல் காரணமாக அந்நாட்டில் இருந்து ஒரு கோடிக்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேறி இருக்கிறார்கள்.

இராணுவ பலத்துடன் ஒப்பிடுகையில் உக்ரைனை விட ரஷ்யா பல மடங்கு வலிமை வாய்ந்ததாகும். இதனால் உக்ரைன் மீது அந்நாடு போர் தொடுத்த போது சில நாட்களிலேயே உக்ரைன் முழுவதையுமே ரஷ்யா கைப்பற்றி விடும் என்றே எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் அதனை பொய்யாக்கும் வகையில் உக்ரைன் இராணுவ வீரர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

ரஷ்ய படையினரை உக்ரைன் இராணுவத்தினர் இவ்வளவு தூரம் வலிமையாக எதிர்கொள்வார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அந்த அளவுக்கு உக்ரைன் இராணுவத்தினர் ரஷ்ய படையினரை சாதுர்யமாக எதிர்கொண்டு வருகிறார்கள். இதனால் ரஷ்ய படையினரால் தங்களது இலக்குகளை எளிதாக எட்ட முடியாத நிலையே உள்ளது.

உக்ரைன் தலைநகரமான கீவ் நகரை ரஷ்ய இராணுவம் சுற்றி வளைத்து தொடர்ச்சியாக தாக்குதல் நடத்திய போதிலும் அந்த நகரை இன்னும் முழுமையாக கைப்பற்ற முடியவில்லை.

இதுவும் ரஷ்யாவுக்கு பின்னடைவாகவே பார்க்கப் படுகிறது.

இதற்கிடையே போர்க் களத்தில் உள்ள ரஷ்ய இராணுவத்திற்கும் உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலையும் உருவாகி உள்ளது.

போர் தொடங்கி ஒரு மாதமாகி இருக்கும் நிலையிலும் உக்ரைன் நாட்டு இராணுவத்தினருடன் ரஷ்ய இராணுவ வீரர்கள் பல பகுதிகளில் போராடும் நிலையே நீடிக்கிறது.

ரஷ்ய இராணுவம் மேற்கொண்ட தவறான திட்டமிடலே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் ரஷ்யா தரப்பிலும் பல இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

சுமார் 15 ஆயிரம் ரஷ்ய வீரர்கள் போரில் கொல்லப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

அதேநேரத்தில் 900 அப்பாவி மக்களும் போரில் உயிரிழந்துள்ளனர்.

அடுத்து வரும் நாட்களிலும் போர் நீடிக்கும் பட்சத்தில் இந்த உயிரிழிப்புகளும், பாதிப்புகளும் மேலும் அதிகரிக்கவே வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

## கிழக்கு ஐரோப்பாவுக்கு மேலும் துருப்புக்களை அனுப்ப நேட்டோ ஒப்புதல்!

நேட்டோ தனது கிழக்குப் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள படைகளின் அதிகரிப்பை மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்க உள்ளது என நேட்டோ அமைப்பின் பொதுச் செயலர் ஜென்ஸ் ஸ்டோல்டன் பெர்க் தெரிவித்துள்ளார்.

ஹங்கேரி, ஸ்லோவாக்கியா, பல்கேரியா மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளுக்கு அதிக துருப்புக்களை அனுப்ப அவர் உறுதியளித்தார்.

மேலும், உக்ரைனுக்கு இரசாயன மற்றும் அணு ஆயுத தடுப்பு ஆயுதங்களை வழங்க, நேட்டோ கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு குறித்த அவசர உச்சிமாநாட்டிற்கு முன்னதாக நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஸ்டோல்டன்பெர்க் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## இழந்த நகரங்களை மீட்பதில் உக்ரைன் தீவிரம்




(கீவ்)

இழந்த பகுதிகளை ரஷ்ய படைகளிடமிருந்து மீட்க, உக்ரைன் இராணுவம் தீவிர சண்டையிட்டு வருவதாக, அமெரிக்கா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

உக்ரைனின் பல்வேறு நகரங்களில் குண்டுவீச்சு தாக்குதல்களை தொடர்ந்து வருகின்ற போதிலும், ரஷ்யப் படைகள் அந்நாட்டில் முன்னேறுவதில் தோல்வியடைந்துள்ளதாக, ஜேர்மனி ஆட்சித்துறை தலைவர் ஓலாஃப் ஷோட்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இருநாடுகளுக்கு இடையிலான போர் உக்ரைனை மட்டும் அழிப்பதில்லை எனவும், ரஷ்யாவின் எதிர்காலத்தையும் அழிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யாவுக்கு எதிரான தடைகளை தொடர்ந்து தீவிரமாக்கி வரும் அதேவேளை, அந்த தடைகள் ரஷ்ய தலைமையைவிட ஐரோப்பிய நாடுகளைப் பாதிக்கக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுத்தார். (நி-5)



ரஷ்யா-உக்ரைன் போரில் உக்ரைன் நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உலக நாடுகளின் கைப்பாவையாக செயற்படுகிறார் என சித்திரிக்கும் வகையில் உருவான இப்புகைப்படம் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்க மன்று உத்தரவு

(மன்னார்)

**தலைமன்னாரில் இருந்து படகு மூலம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இராமேஸ்வரத்திற்குச் சென்ற இலங்கைத் தமிழர்களை மண்டபம் இலங்கை தமிழர் அகதிகள் முகாமில் தங்க வைக்க இராமேஸ்வரம் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டது.**

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் உள்ள மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் கடந்த செவ்வாய்க் கிழமை 16 பேர் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 பேர் அகதிகளாக வந்த நிலையில் அன்றைய தினம் இரவு ஒரு படகில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் அகதிகளாக தனுஷ்கோடி பகுதிக்குச் சென்றனர்.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் அனைவரும் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த 10 பேரையும் மண்டபம் இலங்கை தமிழர் அகதிகள் முகாமில் தங்க வைக்க உத்தரவிட் டார்.

இதேவேளை மன்னாரில் இருந்து சென்ற 2 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேர் மண்டபம் இலங்கை தமிழர் அகதிகள் முகாமுக்கு மாற்ற பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

# சேதன உரம் மூலமான பயிர்ச் செய்கையில் படைப்பிரிவு வெற்றி



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 64 ஆவது படைப் பிரிவின் தலைமை வளாகத்தில் சேதப் பசளை மூலம் மரக்கறி செய்கையினை மேற்கொண்டு நல்ல விளைச்சலினை எதிர்கொண்டுள்ளதாக படைத்தரப்பு விவசாயிகளுக்கு விளக்கம் கொடுத்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தினைச் சேர்ந்த விவசாயிகளை அழைத்த 64 ஆவது படைத்தரப்பு சேதனப் பசளையைப் பயன்படுத்தி செய்கை மேற்கொண்ட புடோல், பாகற்காய், பயிற்றங்காய், முருங்கைக்காய் போன்றவற்றின் விள்ச்சலை விவசாயிகளுக்கு காட்டி அது தொடர்பான விளக்கத்தினையும் வழங்கினர். (4-5-281)

# உலக காசநோய் தினம்; வவு.வில் விழிப்புணர்வு பேரணி

(நெளுக்குளம்)

உலக காச நோய் தினமான நேற்று வவுனியாவில் விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம் பெற்றது. காச நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்ட மருத்துவமனை காச நோய் கட்டுப்பாட்டு பிரிவின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு பேரணி இடம் பெற்றது.




இப்பேரணியில் காச நோய் தொடர்பான பதாகைகளை ஏந்திய வண்ணம் குறித்த பிரிவிற்கான மருத்துவர்கள், தாதியர் கல்லூரி , மாணவர்கள், சுகாதார பிரிவினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டுமுதல்2021ஆம்ஆண்டு வரையான காலப்பகுதியில் 17,553 பேருக்கு காச நோய் தொடர்பான பரிசோதனைகள் செய்யப்பட்டு 336 பேர் அடையாளம் காணப்பட்டதுடன் 48 பேர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ந.ராமதாஸ் தலைமையில் நடைபெறும். (4-5)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

காலஞ்சென்ற அமரர். இராமச்சந்திரன் தனுசன் நினைவாக உடுப்பிட்டி தேவன்குறிச்சி இளைஞர்கள் முன்னெடுக்கும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை 26 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை உடுப்பிட்டி இலக்கணாவத்தை தேவன் குறிச்சி அறிவகம் சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (4-5-18)

# கிளிநொச்சி ஏ-9 வீதியில் கார் - டிப்பர் விபத்து!



(முறிகண்டி)

கிளிநொச்சி நகர் ஏ-9 வீதியில் நேற்றுக் காலை காரும் டிப்பரும் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் கார் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது.

எனினும் காரில் பயணித்த சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் தெய்வாதீனமாக எவ்வித பாதிப்புமின்றி உயிர்தப்பித்தார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(4-5-100-316)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 260 | 300 | 350 |
| தக்காளி | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 100 |
| கோவா | 80 | 100 | 120 |
| கரட் | 150 | 240 | 250 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 150 | 140 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 300 | 350 |
| வெண்டிக்காய் | 200 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 80 | 120 |
| லீக்ஸ் | 150 | 140 | 150 |
| பீற்றூட் | 140 | 130 | 150 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1200 | 1400 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | - | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 100 | 80 |
| தேசிக்காய் | 140 | 150 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 200 | 140 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 160 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | - | 50 | - |






முல்லைத்தீவு வற்றாப்பளை நந்திக்கடல் கரையில் அமையப்பெற்ற கண்ணகி மாட்டுவண்டில் சவாரித்திடல் திறப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சவாரி திடல் திறப்பு நிகழ்வினை தொடர்ந்து வடமாகாணத்தினை சேர்ந்த மாட்டுவண்டி சவாரியாளர்கள் கலந்து கொண்டு மாட்டுவண்டிச் சவாரிபோட்டி நடைபெற்றது. (படங்கள்:- தவசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 21.03.2022-07.10.2023

# பத்தில் வருகிறது ராகு; முத்தான தொழில் இனி அமையும்

## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



(புனர்பூசம், 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம் வரை)

**பெயரின் முதல் எழுத்துக்கள்: ஹி, ஹீ, ஹே, ஹோ, ட, டி, டே, டோ உள்ளவர்களுக்கும்**

**பத்தில் வருகிறது ராகு; முத்தான தொழில் இனி அமையும்**

**கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், மார்ச் 21 ஆம் திகதி முதல் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அது தொழில் ஸ்தானம் என்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். அதேநேரம் கேது பகவான் 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். ஒன்றரை ஆண்டு காலம் இந்த இடத்தில் இருந்தபடியே, ராகு-கேது இருவரும் நட்சத்திரப் பாதசாரங்களுக்கு ஏற்ப பலன்களை வழங்குவார்கள்.

**10 ஆம் இடத்தில் ராகு, 4 ஆம் இடத்தில் கேது**

தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் ராகு பகவான் வரும் பொழுது, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். வேகமும், விவேகமும் கலந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதோடு உத்தியோக உயர்வும் கிடைக்கும். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது நல்லதில்லை. ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். திடீர் திடீரென விரயங்கள் ஏற்படும். திட்டமிட்ட காரியங்களில் மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள். தொழிலில் எதிரிகளின் தொல்லை அதிகரித்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**சூரியன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (21.3.2022 முதல் 22.5.2022 வரை)**

கார்த்திகை நட்சத்திரக் காலில் சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, பணப்பற்றாக்குறை ஏற்படலாம். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். இனத்தார் பகை மாறும். எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதோடு கொள்கைப் பிடிப்போடும் செயற்படுவீர்கள். அடுத்தடுத்து பல நல்ல காரியங்கள் நடைபெறும். அதிகார வர்க்கத்தின் ஆதரவும் உண்டு. 'கொடுத்து வைத்தவர்கள் நீங்கள்தான்' என்று இந்த உலகத்தில் உள்ளவர்கள் சொல்வார்கள்.

**சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சாரம் (23.5.2022 முதல் 28.1.2023 வரை)**

பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, எதிலும் கொஞ்சம் நிதானம் தேவை. பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். உற்றார், உறவினர்களின் பகையை வளரவிடாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழிலில் பங்குதாரர்கள் தங்களுக்குரிய பங்குகளை பிரித்துத் தரச் சொல்லி அச்சுறுத்துவர். பிள்ளைகள் வழியிலும் சிறுசிறு பிரச்சினைகள் உருவாகலாம். அவர்களை நெறிப்படுத்துவதும், அக்கறைப்படுத்துவதும் நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலையும் உருவாகும். உத்தியோகத்தில் கிடைக்க வேண்டிய சலுகைகள் தாமதப்படலாம். இது போன்ற காலங்களில் திசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்து மேற்கொள்வது நல்லது.

**கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சாரம் (29.1.2023 முதல் 7.10.2023 வரை)**

அச்சுவினி நட்சத்திரக் காலில் கேதுவின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியம் பற்றிய பயம் அதிகரிக்கும். அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. நண்பர்கள் வழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு விரயங்கள் உருவாகலாம். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ளும் சூழ்நிலை உண்டு. குடும்பத்தினருடன் தேவையற்ற வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து வரும் அழைப்புகளில் தாமதம் ஏற்படலாம். விரயங்கள் அதிகரிக்கும் இந்த நேரத்தில் வீண் விரயங்களில் இருந்து விடுபட வேண்டுமானால் சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே திரும்பி வரப்போகிறது.

**குரு சாரத்தில் கேது சஞ்சாரம் (21.3.2022 முதல் 25.9.2022 வரை)**

விசாக நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். 'நேர்முகத் தேர்விற்கு சென்றும், இதுவரை வேலை கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல தகவல் கிடைக்கும்.

உடல் நலத்தில் கவனம் தேவை. மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். வெற்றிக்குரிய தகவல்கள் தொழில் ரீதியாக வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், அதில் இருந்து விடுபட்டு, சுயதொழில் செய்ய




லாமா என்று சிந்திப்பர். அதற்கு நண்பர்கள் உறுதுணைபுரிவர்.

**ராகு சாரத்தில் கேது சஞ்சாரம் (26.9.2022 முதல் 3.6.2023 வரை)**

சுவாதி நட்சத்திரக் காலில் ராகுவின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, சில நல்ல வாய்ப்புகள் கைநழுவிச் செல்லலாம். தொழிலில் எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். அரசியல்வாதிகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். பொதுவாழ்வில் இருப்பவர்கள் மக்கள் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்வது நல்லது. 'வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றலாமா?' என்று சிந்திப்பீர்கள். வழக்குகள் சாதகமாக முடிந்தாலும் திருப்தி ஏற்படாது. பணிபுரியும் இடத்தில் உடன் பணிபுரிபவர்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்பட்டு மன நிம்மதியைக் குறைக்கும்.

**செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சாரம் (4.6.2023 முதல் 7.10.2023 வரை)**

சித்திரை நட்சத்திரக் காலில் செவ்வாயின் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பணவரவு திருப்தி தரும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உங்களுக்கு ஆதாயம் தரும் தகவல்களைச் சொல்வார்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் நட்பால் சில நன்மைகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, இதுவரை பரிசீலனையில் இருந்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் இப்போது கிடைக்கப்பெறலாம்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

இந்த ராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில், குரு பகவான் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். ஏப்ரல் 13 ஆம் திகதி மீன இராசிக்கு செல்லும் குருவின் பார்வை பலத்தால் உங்கள் இராசி புனிதமடைகிறது. எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறும். உடன் பிறந்தோர் உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் தடைகள் அனைத்தும் விலகும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். 22.4.2023 அன்று மேஷ இராசிக்கு குரு பெயர்ச்சியாகிறார். இதனால் குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

. 16.3.2023 அன்று கும்ப இராசிக்கு சனி பகவான் பெயர்கிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சனி அடியெடுத்து வைப்பதால், 'அஷ்டமத்துச் சனி'யின் ஆதிக்கம் தொடங்குகிறது. மிகுந்த கவனம் தேவைப்படும் நேரம் இது. பொருளாதாரப் பற்றாக்குறை, புதிய முயற்சிகளில் தடை ஏற்படும். இடமாற்றம், ஊர் மாற்றம் ஏற்படும். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். உற்றார், உறவினர்கள் பகையாக மாறும் வாய்ப்பு உண்டு. சனி பகவானுக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமே எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த ராகு - கேது பெயர்ச்சியின் விளைவாக நிறைய மாற்றங்களைச் சந்திக்கப் போகிறீர்கள். தொடக்கத்தில் உங்களுக்கு கண்டகச் சனி, சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வலுவடைகிறது. எனவே விரயங்கள் இருமடங்காகும். வீடு மாற்றங்களும், இடமாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் விரும்பத்தக்கதாக அமையாது. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைப்பது அரிது. சஷ்டி விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## அறிவு வந்தது !



(நேற்றைய தொடர்ச்சி)

அன்றிரவு தீபன் வயலிலிருந்து வீட்டிற்கு வந்ததும் ஜமீன்தாரர் கங்காதரரைப் பற்றி அவனிடம் சொல்லி "ஒரு யோகி என்பவர் தாம் கற்றதைப் பிறருக்கு போதிக்க வேண்டும்.

இந்த கங்காநாதர் அகம்பாவம் கொண்டு யாரையும் மதியாமலும் பேசாமலும் இருக்கிறார். நீ போய் அவருக்கு எடுத்துச் சொல்லி அவரது போக்கை மாற்ற வேண்டும். இந்த வேலையை வேறு யாராலும் செய்யவும் முடியாது" என்றார். மறுநாளே தீபன் கங்காநாதரைப் போய்ப் பார்த்தான். அவருக்கு அறிவுரைகள் கூறினான். அவரும் அவன் கூறுவதைக் கேட்டு "எனக்கு அறிவுரை கூற உனக்கு என்ன தகுதி? நான் படித்த நூல்களைக் கூறுகிறேன். அதற்குப் பிறகு நீ எனக்கு அறிவுரை கூறுவது பற்றி யோசி" என்று கூறி நான்கு நாட்கள் தாம் படித்த சாஸ்திரங்களை எல்லாம் விளக்கிக் கூறினார். அவ்வளவு நூல்கள் உள்ளனவா? என்று தீபன் ஆச்சரியப்பட்டான்.

ஆனால் அவன் "நீங்கள் எவ்வளவு படித்திருந்தாலும் ஒரு சாதாரண மனிதன் அவற்றைப் புரிந்து கொள்ளும்படி எடுத்துச் சொல்லும் சக்தி உங்களுக்குக் கிடையாது. நான் உங்களைப் போல அவ்வளவு படிக்காது போனாலும் உங்களுக்கு இல்லாத அந்தச் சக்தி எனக்கு இருக்கிறது" என்றான். தான் ஜமீன்தாரருக்கு யோசனை கூறியதையும் வயல் வேலைகளில் தோன்றும் பிரச்சினைகளைச் சமாளிப்பதையும் கூறினான். கங்காநாதரும் "நீ மாபெரும் மேதை என்று நீ பேசுவதிலிருந்தே தெரிந்து கொண்டேன். உலகிற்கு உன் போன்ற வர்களே தேவை. என்னைப் போன்றவர்களல்ல. உன்னால் செய்ய முடிவதை நான் செய்ய முடியாததால் நான் இங்கேயே இருக்கிறேன். நீ மக்களிடையே இருந்து பெயரும் புகழும் பெறு" என்றார்.

தீபன் புவனகிரிக்கு வந்த தன் தந்தையிடமும் ஜமீன்தாரரிடமும் நடந்ததைக் கூறினான். அன்று முதல் தீபன் எல்லோரிடமும் பணிவாகப் பேசி அடக்கத்துடன் இருந்து வரலானான். ஞானசேகரருக்கு தீபனிடம் மாறுதல் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பது தெரிந்து விட்டது. கங்காநாதர் தீபனைப் புகழ்வது போலப் புகழ்ந்து அவன் கற்றது மிகக் குறைவே என்பதை அவன் மனதில் பதிய வைத்து விட்டார். முற்றும் துறந்தவர்கள் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்படுவதில்லை. அவர்களுக்கு உள்ள ஞானம் தனக்கு இல்லை என்பதை தீபன் அறிந்து கொண்டதாலேயே அவன் கர்வம் ஒழிந்து பணிவு அவனிடம் வந்தது. இது கண்டு ஞானசேகரரும் ஜமீன்தாரரும் மகிழ்ந்து போனார்கள். (முற்றும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




"ஏன் என்னை ஒதுக்குகிறாய்; உனக்குக் கொடுமை இழைத்த தசரதன் மகன் என்பதாலா? நீ எதைச் சொல்லி இதுவரை மறுத்தேன்; சினம் தணிக என்றாய்; தணிகை மலையாயினேன்; சீற்றம் கொள்ளாதே என்றாய்? அதற்கு மறுப்பு நான் கூறவில்லை; நீ எதைச் சொன்னாலும் கேட்டு நடப்பவன் நான்; ஆனால் 'இரு' என்று கூறுவதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது; இது கொடுமை மிக்கது; அரச செல்வத்தை விட்டுச் செல்லும் நீ, நானும் உன் உடைமை என்பதால் என் உறவை உடைத்து எறிகிறாயா?" என்று கேட்டான் அதற்கு மேல் இராமன் பேசுவதைத் தவிர்த்தான்; அவனைத் தடுக்கவில்லை.

### சீதை செய்கை

சித்திரப் பாவை போல எந்தச் சலனமும் இல்லாமல் வாழ்ந்து வந்த சீதைக்கு இந்தப் புதிய மாற்றங்கள் விசித்திரமாய்ப் பட்டன; "என்ன நடக்கிறது?" என்று எடுத்துக் கூற யாரும் முன் வரவில்லை; அவளும் தன் நாயகன் நா, உரையாததால் நலிந்து கவிழ்ந்திருந்தாள்.

"எதிர்பாராதது நட க்கலாம்; ஆனால், எதிர் த்துப் பேசும் உரிமையை நீ எடுத்துக் கொள்ளாதே; எல்லாம் மிகச் சிறிய செய்திகள்தான்," என் றான்.

"பரதன் பட்டத்துக்கு வருகிறான்; மகிழ்ச்சிமிக்க செயதி." யான் காட்டுக்குப் போக வேண்டும் என்பது மன்னன் கட்டளை" "மாமியார் மெச்சும் மருமகளாய் நீ அவர்களுக்குத் துணையாய் இங்கே இருப்பாய்" என்று அறிவித்தான்.

"நான் காட்டுக்குச் செல்லும் தவசி; நீ வீட்டு ஆட்சிக்கு அமையும் அரசி; இவற்றை நீ தெரிந்து கொள் அலசி" என்று விளக்கம் கூறினான்.

"பரிவு நீங்கிய மனத்தோடு பிரிவை எனக்குத் தருகிறாய்; ஏன் என்னை விட்டு நீ நீங்க வேண்டும்?"

"கட்டிய மனைவி கால்கட்டு, என்று வெட்டி விடத் துணிகிறாயா! மனைவி என்றால் மனைக்குத்தான் உரியவள் என்று விதிக்கிறாயா? காட்டுவழி முள் உடை யது; பரல் கற்கள் சுடும் என்று கருதுகிறாயா?" "குளிர் சாதனங்களில் பழகிய இவளுக்கு உபசாதனங்கள் அமைத்துத் தர முடியாது என்று அஞ்சுகின்றாயா?

"ஒன்றே ஒன்று கேட்கிறேன்; இதற்கு மட்டும் விடை கேட்கிறேன்; பிரிவினும் சுடுமோ பெருங்காடு?" "என் ஒருத்திக்குத் தான் இவ்வளவு பெரிய காட்டில் இடமில்லையா?" என்று கேட்டாள். "உன் இன்ப வாழ்விற்கு நான் இடையூறு என்று பட்டால் நிற்பதற்கு எனக்குத் தடையாதும் இல்லை" என்றாள்.

அன்பின் அழைப்பிற்கு அவன் அடி பணிந்தான். அதற்கு மேல் பேசுவதை நிறுத்திக் கொண்டான். சீரை சுற்றிய திருமகள் முன்னே நடந்தாள்; காரை ஒத்தவன் அவளைத் தொடர்ந்தான் இவ்விருவர் பின்னான் இலக்குவன் நடந்தான் இராமன் தாயரைக் கைகூப்பித் தொழுது இறுதி வணக்கம் செலுத்தினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் நாம் காண்கின்ற எல்லாச் செயல்களும் சமுதாயத்தின் எல்லா இயக்கங்களும் நம்மைச் சுற்றி நடக்கும் வேலைகள் அத்தனையும் வெறும் எண்ணங்களின் வெளிப்பாடுகளே. *~விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## டமுக்கு... டுமுக்கு... ஆளுக்கொன்று அமுக்கு...

ஒரு காட்டில் நரிகளும் முயல்களும் வாழ்ந்து வந்தன. ஒவ்வொரு நாளும் நரிகளின் வேட்டையால், முயல்கள் பலியாகிப் போயின.

இதனால் முயல் கூட்டம் மிகுந்த வேதனையுற்றது.

ஒருநாள் முயல் கூட்டத் தலைவன் முயல்களை அழைத்து, இனி நாம் நரிகளுக்குப் பலியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கேற்றவாறு பாதுகாப்பான இடத்துக்குச் செல்வோம் எனக் கூறியது. அவ்வாறே முயல்கள் பாதுகாப்பான இடத்துக்குச் சென்றன.

இவ்வாறு முயல்கள் தற்பாதுகாப்பு நடவடிக்கையை எடுத்ததன் காரணமாக நரிகளால் முயல்களை வேட்டையாட முடியவில்லை.

இந்தநிலையில், நரிக்கூட்டத் தலைவன் நரிப் பரிவாரங்களை அழைத்து, முயல்களை நாம் கண்டபாட்டில் கொன்று புசித்ததால் முயல்கள் விழிப்படைந்துவிட்டன.

இதனால் முயல்களைச் சாப்பிட முடியாத துர்ப்பாக்கிய நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே நாம் முயல்களுடன் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தி, அவர்களை ஆசுவாசப்படுத்த வேண்டும்.

அதன்பின்னர் ஆரவாரமில்லாமல், மிகத் தந்திரமாக முயல்களைப் பிடித்துச் சாப்பிட வேண்டும் எனக் கூறியது.

இதனைக் கேட்ட நரிகள், தலைவா! அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என வினவின.

நரிகளே! தந்திரத்துக்குப் பெயர்போனவர்கள் நாங்கள். அதனால்தான் நரித்தந்திரம் என்று மனிதர்கள் கூறுகின்றனர்.

எனவே முயல் கூட்டத் தலைவருடன் பேசி இரு தரப்பும் சேர்ந்து ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வோம் என்றது.

அதற்கு நரிகளும் சம்மதம் தெரிவித்தன.

மறுநாள் நரிக்கூட்டத் தலைவன் முயல் கூட்டத் தலைவனைச் சந்தித்து நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி நாங்கள் ஒற்றுமையாக இருப்போம்.

எங்களின் ஒற்றுமையை வலிமைப்படுத்த நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கலை நிகழ்வை நடத்துவோம் என்றது.

நரிக்கூட்டத் தலைவனின் அழைப்பை நிராகரிக்க முடியாத முயல் கூட்டத்தலைவன் அதற்குச் சம்மதம் தெரிவித்தான்.

அந்தக்காட்டில் சோடனை அலங்காரம் செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்க நரிகள் தயாராகின.

முயல்களும் தம் தலைவனுடன் நிகழ்வு நடக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தன.

இதோ! நிகழ்ச்சி ஆரம்பமாகிறது. நரிகளும் முயல்களும் வட்டமாக நிற்கின்றன.

நரி கூட்டத் தலைவன் பாடும்போது; நரிகளும் முயல்களும் வட்டமாகச் சுற்றி வலம் வரும்.

இதோ! நரிக்கூட்டத் தலைவன் பாடுகின்றான்.

டமுக்கு... டுமுக்கு... ஆளுக்கொன்று அமுக்கு
டமுக்கு.... டுமுக்கு ஆளுக்கொன்று அமுக்கு...

இவ்வாறு நரிக்கூட்டத் தலைவன் பாடிய போது, நிலைமையைப் புரிந்து கொண்ட முயல் கூட்டத் தலைவன் இப்போது பாடுகின்றான்.

வர வர நழுவு... வர வர நழுவு...

காட்டில் நடந்த இந்த நிகழ்ச்சியில் நரிகளும் முயல்களும் தத்தம் தந்திரோபாயங்களைப் பின்பற்றுகின்றன.

அந்தத் தாளலயத்துக்கு நம் நாட்டிலும் பஞ்சமில்லை.

ஆனால் இங்கோ முயல்கள் எப்போதும் நரிகளிடம் தோற்றே போகின்றன.

## மட்டக்களப்பில் பன்றிக்கு வைத்த மின்சார வேலியில் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோமத்தலாவெளி கிராம சேவகர் பிரிவில் பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

கோமத்தலாவெளி கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 32 வயதான சந்திரசேகரன் யோகேஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

பழப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் குறித்த நபர் தன்னுடைய தோட்டத்துக்கு மின்சார சபையில் முறையாக மின்சாரம் பெறப்பட்டிருந்த நிலையில், தோட்டத்துக்குள் பன்றி மற்றும் காட்டு மிருகங்கள் வருவதினால் அவற்றில் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்காக முறையற்ற விதத்தில் மின்சாரத்தினை பயன்படுத்தியுள்ளார் என பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

முறையற்ற விதத்தில் மின்சாரத்துடன் கம்பி இணைக்கப்பட்டதினால் மின்சாரம் தாக்கி இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.(ம)

## கோவிட்; 5 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 5 பேர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,450 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் ஆர்க்லேன்- உடுவில், சங்குவேலி, உடுவில் மகளிர் கல்லூரி, சுழிபுரம், கள்ளவேம்படி, பத்தானைக்கேணியடி, தொல்புரம், சத்தியகாடு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் புத்தடிச் சந்தி, தொட்டியடிச்சந்தி, தொட்டியடி, பம்ப் கவுஸ் விசுவமடு, SLNG- முத்தையன்கட்டு, கணேச புரம், கனகரத்தினபுரம் ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டுக்குளம், முத்துவிநாயகபுரம், தட்டையார்மலை, வித்தியாபுரம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மாந்தைச் ச்சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), நாகத் தாழ்வு, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ் வரம் மருத்துவமனை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### செய்தி வெள்ளம்

சுமார் 2 இலட்சம் பேர் பங்கு பெற்ற இந்த நிகழ்ச்சிக்காக , மாற்றுப்பாதைகளை போக்குவரத்து காவல்த்துறை முன்னரே அறிவித்திருந்தது.நிகழ்ச்சி எந்தக் குழப்பமும் இல்லாமல் நடந்தேறியது.

27 நிமிட்ங்கள் நடந்த முழுமையான ஆழ்ந்த தியானத்தைத் தொடந்து மக்கள் கூட்டம் முழுவதும் எழுந்து நின்று ஆடிப்பாடியது.

**இந்த மாபெரும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வெறும் 500 காவலர்கள் மட்டுமே இருந்தனர் [illegible] நடந்து கொண்டனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு அமைய நாட்டில் இன்றும் மின்வெட்டினை அமுல்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, A முதல் L வரையிலான வலயங்களில் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலான காலப் பகுதியினுள் தலா 3 மணிநேரமும் 20 நிமிடங்களும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப் பகுதியினுள் தலா ஒரு மணி நேரமும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், இன்றைய தினம் P முதல் W வரையான வலயங்களில் காலை 8.30 மணி முதல் 5.30 மணிவரையான காலப்பகுதியினுள் 4 மணிநேரமும் 30 நிமிடங்களும் மாலை 5.30 மணிமுதல் இரவு 11 மணிவரை ஒரு மணி நேரமும் 50 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ம)

## நாட்டில் நேற்று மேலும் 248 பேருக்கு தொற்று

நாட்டில்நேற்று மேலும் 248 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 660,399 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரி பதவி விலகல்

(கொழும்பு)

அண்மையில் மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய - பசுபிக் திணைக்களத்தின் தலைவர் சாங்யோங் ரீ அப்பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அனுபவமிக்க பொருளாதார நிபுணரான இவர் தென் கொரியாவின் மத்திய வங்கி ஆளுநராக பெயரிடப்பட்டதையடுத்து; இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்த அறிக்கையைப் பெறுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த சாங் யோங் ரீ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

"அன்புடன் ஆசாரபூஜை செய்து
உய்ந்திட வீணாள் படாது அருள் புரிவாயே "

என்று அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

மாலையிலே ஒருவன் நதிக்குப் போனான்.அதில் ஒரு துளிகூடத் தண்ணீர் இல்லை. மறுநாள் காலை நதியின் அருகில் சென்றான்.நதியில் நொப்பும் நுரையுமாக வண்டலுடன் வெள்ளம் ஓடுவதைக் கண்டான் இந்த ஊரில் சிறிதும் மழை பொழியவில்லை.

மேற்கே மழை பொழிந்தது என்கின்றார்.கண்டது வெள்ளம் ; காணாதது மழை . கண்ட வெள்ளத்தைக் கொண்டு காணாத மழையை நிச்சயிப்பது போல். காணுகின்ற உலகைக் கண்டு காணாத கடவுளைக் கருதல் அளவையால் உறுதிப்படுத்த வேண்டும்.



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 27




### தென் மாகாணம் பற்றிய தகவல்கள்

இலங்கையின் தென் பிராந்தியத்திற்குரிய தென் மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பு 5,554 சதுர கிலோ மீற்றர் ஆகும். காலி மாவட்டம் 1,652 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் மாத்தறை மாவட்டம் 1,283 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் அம்பாந்தோட்டை மாவட்டம் 2,609 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. மாகாணத்தின் மொத்தப் பரப்பு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 8.4% ஆகும். 5,383 சதுர கிலோ மீற்றர் நிலப் பிரதேசத்தையும் 161 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பரப்பையும் கொண்டு அமைந்துள்ளது.

பிரதேசத்தின் மொத்தப்பரப்பில் 2.9% உள்ளக நீர் வளங்களாகும். தென் மாகாணம் வடக்குத் திசையில் மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களையும், தெற்கு, கிழக்கு மற்றும் மேற்குப் பிரதேசங்கள் கடலையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 992 சதுர கிலோ மீற்றர் அதாவது 17.9% வனப் பிரதேசமாக காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மாகாண வீதிகளின் நீளம் 3,204 கிலோ மீற்றராக காணப்பட்டது. காலி நகரம் மாகாணத்தின் தலைநகராகக் காணப்படுகிறது.

**இலங்கையின் தென் பிராந்தியத்திற்குரிய தென் மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பு 5,554 சதுர கிலோ மீற்றர் ஆகும். காலி மாவட்டம் 1,652 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் மாத்தறை மாவட்டம் 1,283 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் அம்பாந்தோட்டை மாவட்டம் 2,609 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. மாகாணத்தின் மொத்தப் பரப்பு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் 8.4% ஆகும்.**

தென் மாகாணத்தினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு 2015 ஆம் ஆண்டு 11% பங்களிப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. அதில் 10% சேவைத் துறையிலும், 9% கைத்தொழில் துறையிலும் காணப்பட்டதோடு விவசாயத் துறையின் பங்களிப்பு 17 % காணப்பட்டது. தென் மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (60%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற்றுறையில் இருந்தும் (26%) மிகுதி விவசாயத் துறையில் இருந்தும் (14%) கிடைக்கப் பெறுகின்றன. 2016 ஆம் ஆண்டில் தென் மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (40%), விவசாயத் துறையில் (36%) அதைத் தொடர்ந்து மற்றும் கைத்தொழிற்றுறையில் (24%) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### தென் மாகாணம் மொத்த சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி மற்றும் எழுத்தறிவு -2012

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.2% இற்கு சமமான சனத்தொகை அதாவது 2,477,285 தென் மாகாணத்தில் வசிக்கின்றனர்.

**சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) படி நாட்டின் மொத்த சனத்தொகையில் 12.2 % இற்கு சமமான சனத்தொகை தென் மாகாணத்தில் வசிக்கின்றனர். தென் மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 42.9% காலி மாவட்டத்திலும் 32.9% மாத்தறை மாவட்டத்திலும் 24.2% அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் வசிக்கின்றனர். மாகாணத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 460 ஆகும்.**

மாகாணத்தின் மொத்த சனத்தொகையில் 1,063,334 (42.9%) காலி மாவட்டத்திலும் 814,048 (32.9%) மாத்தறை மாவட்டத்திலும் 599,093 (24.2%) அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.

மாகாணத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 460 ஆகும். 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு வீதம் 95.3% ஆகும்.

### தென் மாகாணம் பால்நிலை அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

தென் மாகாணத்திலும் அதேபோன்று மாவட்டங்களிலும் இலங்கையிலும் பால்நிலை அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை (g1) குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, நாட்டின் ஏனைய மாகாணங்களைப் போன்று இந்த மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் பெண்களின் சனத்தொகை ஆண்களின் சனத்தொகையை மிஞ்சியுள்ளது.

### தென் மாகாணம் சனத்தொகை பிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் -2012

சனத்தொகை துறைகள் அடிப்படையில் மாறுபட்டுள்ள விதம் அட்டவணை (g2) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தென் மாகாணத்தின் பெரும்பான்மை மக்கள் (87.8%) கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர்.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தென் மாகாணத்தின் நகர்ப்புற சனத்தொகை (10.8%) கூடிய பெறுமானத்தைக் கொண்டுள்ளது. நாட்டின் மொத்த நகர்ப்புற சனத்தொகையில் 13.8% தென் மாகாணத்தில் வசிக்கின்றனர்.

அட்டவணை(g1): பால்நிலை அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு – தென் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | ஆண் | % | பெண் | % |
|---|---|---|---|---|---|
| காலி | 1,063,334 | 509,902 | 48.0 | 553,432 | 52.0 |
| மாத்தறை | 814,048 | 389,903 | 47.9 | 424,145 | 52.1 |
| அம்பாந்தோட்டை | 599,903 | 294,736 | 49.1 | 305,167 | 50.9 |
| தென் மாகாணம் | 2,477,285 | 1,194,541 | 48.2 | 1,282,744 | 51.8 |

அட்டவணை(g2): துறைகள் அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு – தென் மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத்தொகை | நகர்புற சனத்தொகை | | கிராமிய சனத்தொகை | | தோட்ட சனத்தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| காலி | 1,063,334 | 133,398 | 12.5 | 911,159 | 85.7 | 18,777 | 1.8 |
| மாத்தறை | 814,048 | 96,570 | 11.9 | 694,948 | 85.4 | 22,530 | 2.8 |
| அம்பாந்தோட்டை | 599,903 | 31,709 | 5.3 | 568,194 | 94.7 | - | - |
| தென் மாகாணம் | 2,477,285 | 261,677 | 10.6 | 2,174,301 | 87.8 | 41,307 | 1.7 |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

நிலையில், எரிபொருள் நிலையங்களுக்கு கிடைக்கும் எரிபொருட்களை ஒரு சிலர் பல தடவைகள் பெற்று, பதுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி, மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை, முல்லைத்தீவு, நாயாறு, புதுக்குடியிருப்பு மற்றும் விசுவமடு பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களில் எரிபொருள் விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றன. இவை பலவற்றில் பெற்றோல் உள்ளபோதும் டீசல், மண்ணெண்ணை இல்லாத நிலை காணப்படுகின்றது.

துணுக்காய் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவப் பிரசன்னத்துடனேயே எரிபொருள் விநியோகம் இடம் பெற்று வருகிறது.

நேற்று அதிகாலை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற 6,600 லீற்றர் டீசல், ஒவ்வொரு வாகனங்களுக்கும் தலா 5,000 ரூபாய் வீதமே வழங்கப்பட்டது.

அதேவேளை, மண்ணெண்ணை விநியோகமும் ஒரு குடும்ப அட்டைக்கு தலா 500 ரூபாய் வீதமே வழங்கப்படுகிறது.

அதேவேளை, இராணுவத்தினரால் வாகன இலக்கத் தகடுகள் பதியப்பட்ட பின்னரே எரிபொருள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இந்திய...

இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

இதேவேளை இரணைதீவு அருகே அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-18,33,104)

## சாவகச்சேரி...

பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 39 வயதான குறித்த நபர் அப்பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலை கொள்வனவு செய்து தன்மீது ஊற்றி பின்னர் தீ மூட்டுவதற்கு முயற்சித்தபோது அவ்வழியாக முச்சக்கரவண்டியில் சென்ற சாவகச்சேரிப் பொலிஸார் அவரை தீ மூட்ட விடாது தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அத்துடன் குறித்த நபரை பொலிஸ் நிலையம் அழைத்து வந்து தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-30)

## இளைஞன்...

ஞன் ஒருவர் சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் உள்ள மத்திய பிரதான உணவுக் களஞ்சிய பகுதியின் சினிமா திரையரங்கு முன்பாக இடம்பெற்றது.

குடும்ப உறவினர்களுக்கு கடந்த 19 ஆம் திகதி அன்று வேலைக்கு போய்வருவதாக கூறிவிட்டு சென்று இரவுவரை வராததனால் பொலிஸ் நிலையத்தில் குடும்ப உறவினர்கள் முறைப்பாட்டினை செய்துள்ளனர்

இந்நிலையில் நேற்று மாலை 5.30 மணியளவில் யாழ். நகர் மத்திய உணவுக் களஞ்சிய பகுதியில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் அவரின் சடலம் காணப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையினை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-104)

## ஆலயத்திற்கு...

குதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

60 - 65 வயதுக்கு இடைப்பட்ட ஆண் ஒருவர் ஆலயத்தை வழிபட ஆலயத்துக்குள் நுழைந்தபோது திடீரென மயங்கி விழுந்ததால் அப்பகுதியில் நின்றவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்கினர்.

அம்புலன்ஸ் வண்டியில் வந்த வைத்தியர், மயங்கி விழுந்த நபரை பரிசோதித்த போது அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பிலான மரணவிசாரணையை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டிருந்தார்.

குறித்த விடயம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-104)

## ஜனாதிபதி...

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பின்போது, நிலையான ஓர் அரசியல் தீர்வு பெறுவது குறித்தான விடயங்கள் மாத்திரமே அவதானம் செலுத்தப்படும் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் செய்தியாளர்களிடம் விளக்கியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக ஒத்திவைக்கப்பட்டு வரும் நிலையில் இக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. இதன்போது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்தே அவதானம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு ஒன்று கிடைத்தால் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வார்கள் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும், அதிகாரப்பகிர்வு ஒன்றின் ஊடாக அரசியல் தீர்வுக்கான பணிகளை அரசாங்கம் முன்னெடுத்தால் மாத்திரமே இது சாத்தியமாகும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார். (ம)

## அரசின்...

அதற்காக அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கு மேலும் சிலர் தயாராக இருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, கெவிந்து குமாரதுங்க, டிரான் அலஸ், பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச உள்ளிட்ட 11 கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று காலை தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மல்வத்து பீட மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, இந்தியாவுடனான உடன்படிக்கையில், அமைச்சரவைக்கு அதனை சமர்ப்பிக்கும் முன்னரே கையொப்பம் இடப்பட்ட விடயத்திற்கு அதிருப்தி வெளியிட்டார்.

சர்வதேச நாணய நிதியம் தற்போது அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஆயுதமாக மாறியுள்ளதாகவும் அது தொடர்பில் தாம் அச்சமடைந்துள்ளதாகவும் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் குறிப்பிட்டார். (ம)

## கேவல...

கண்டியில் மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களிடம் இதனை தெரிவித்தார்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவநாணயக்கார உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு 11 அரசியல் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள ரதஹறிமக வேலைத் திட்டம் தொடர்பில் மாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளிப்பதற்காக கண்டிக்கு விஜயம் செய்தபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்கர்களை சந்தித்து, தமது வேலைத் திட்ட ஆவணங்களை வழங்கினர்.

விமல் வீரவன்ஸ மேலும் தெரிவிக்கையில்,

"முழு நாடும் சரியான பாதையில்" என்ற பெயரில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள அரசாங்கத்திற்கு ஒரு வழியைக் காட்டினோம்.

இதன் விளைவாக இரண்டு அமைச்சர்கள் அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அதை நாங்கள் மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டோம். கண்டிக்கு வந்தோம்.

இன்று 11 கட்சிகள் ஒன்றிணைந்து மேற்கூறிய "முழு நாடும் சரி" என்ற தேசிய வேலைத்திட்டத்தை மகாநாயக்க தேரர்களுக்கு முன்வைக்கும் வகையில், எமது வரவிருக்கும் வேலைத்திட்டத்தை மகாநாயக்க தேரர்களிடம் முன்வைத்தோம்.

இந்த நாட்டுக்கு எதிரான சகல உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்ட பின்னரே அமைச்சரவையில் அவை பற்றி கூறியுள்ளார்கள்.


இந்த உடன்படிக்கைகள் அனைத்தும் மக்கள் அறியாமலேயே எரிவாயு, எரிபொருள் வரிசைகள் மற்றும் மருந்து வரிசைகளில் காத்திருக்கும்போது கையெழுத்திடப்பட்டது. இன்று நாட்டில் மிகவும் ஆபத்தான நிலை உருவாகியுள்ளது.

அந்தநிலை இன்னும் மோசமாகி வருவதை அனுமதிக்க முடியாது. அதனால்தான் இதை மிகமோசமான நேரத்தில் நாட்டுக்கு சொல்ல ஆரம்பித்தோம் என்றார். (ம)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 2021 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
**158** புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய கரணவாய் வடக்கு நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த
சிவகுமார் மஞ்சுளா தம்பதிகளின் புதல்வன்

## செல்வன் சிவகுமார் ரோகித்

அவர்களை பாராட்டுவதோடு கரணவாய் வடக்கு தாமோதரா வித்தியாலய அதிபர் அவர்களுக்கும் கல்வி கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் குறிப்பாக வகுப்பாசிரியர் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வாழ்த்துவோர்**

பேரன் **இலங்கையர் சம்பந்தநாதன் தண்மதி** குடும்பம்
பெரியப்பா **திருநாமம் விஜயநாதன் கொன்சி** குடும்பம்
மாமா **சின்னத்துரை பத்மநாதன் மலர்** குடும்பம்
மாமா **சின்னத்துரை இலங்கைநாதன் மதிவதனா** குடும்பம்
மாமா **சின்னத்துரை சிவாஜிநாதன் வசந்தகலா** குடும்பம்
மாமா **செல்லையா பன்னீர்ச்செல்வம் மதிமலர்** குடும்பம்
மாமா **செல்லையா பிரேமதாஸ் பத்மா** குடும்பம்
மாமா **செல்லையா உதயதாஸ் (கண்ணன்)** குடும்பம்
மாமா **தங்கவேல் ரதீஸ்குமார் ரோகினி (கொழும்பு)** குடும்பம்
மாமா **தங்கவேல் ராஜ்குமார் ராஜேந்தினி** குடும்பம்

(C-4047)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23 - 11 - 1962



உதிர்வு
21 - 3 - 2021

அமரர் திருமதி

## பிரபாலினி வரதராஜன்

**(ஆசிரியை - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)**

அன்பான குடும்பத் தலைவியாய்
பண்பான நல் வழிகாட்டியாய்
ஊர் போற்றும் நல் உத்தமியாய்
பேர் கூறும் நல் ஆசானாய்
பாரினில் வாழ்ந்த எங்கள் குலவிளக்கே
என்றும் மறவோம் உம் அன்புத் திருமுகத்தை
ஆண்டொன்றென்ன ஆண்டுகள் பல கடந்தாலும்
எம்முன் என்றென்றும் ஆத்மார்த்தமாய் நிறைந்திருப்பீர்கள்
ஆண்டவன் திருவடியில் இளைப்பாற தினமும் பிரார்த்திக்கின்றோம்
**ஓம் சாந்தி!**

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(C-4045)

# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND

## BUSINESS MANAGEMENT

- Management - Marketing - Human Resource Management

Leading to BA(Hons)

(C-4048)

23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்றல் முறை மற்றும் சூழல்
- அனுபவமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
- இலகு தவணைக் கட்டணம்
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது

Pearson BTEC Approved Centre SOLENT UNIVERSITY SOUTHAMPTON

077 710 2131
077 068 8828

INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION

021 221 9910 info@bcas.lk www.bcas.lk BCAS Ranked "Platinum Partner" No.1 once again

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.